IN THE COURT OF MAGALIR NEETHIMANDRAM (FAST TRACK MAHILA COURT, UDHAGAMANDALAM) SESSIONS JUDGE OF THE NILGIRIS AT UDHAGAMANDALAM.

| | |
|---|---|
| Sessions | S.C. 54/2017. |
| | Prosecution |
| Deposition of witness for | LW 13, PW 10 |
| Name | **காவல் ஆய்வாளர் திருமதி. பொன்னம்மாள்.** |
| Father's Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |
| Mobile No. | |
| Email I.D | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 4th day of March 2026.

04.03.2026.

**எதிரிகள் ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

**சத்தியமாக சொல்கிறேன்.**

**<u>முதல் விசாரணை:–</u>**

நான் தற்சமயம் சென்னை மாவட்டம், போத்தனூர் வட்டம், இருப்பு பாதை காவல் ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். நான் இதற்கு முன்பு 2017 ஆம் வருடம் ஜனவரி மாதம் குன்னூர் அனைத்து மகளிர் காவல் நிலைய காவல் ஆய்வாளராக பணி செய்த போது, எனது பெயர் அரசாங்க பதிவேடுகளின் படி எ.பொன்னம்மாள் என்று இருந்தது, தற்சமயம் நான் அரசு பதிவேடுகளில் ருவாந்திகா பெயர் மாற்றம் செய்துள்ளேன். கடந்த 04.10.2023 ஆம் தேதி அரசாங்க ஆணையின் படி என்னுடைய பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதன் பின்னர் என்னுடைய கையொப்பமும் மாற்றி கையொப்பம் செய்து வருகிறேன்.

இவ்வழக்கில் புலன் விசாரணை செய்த போது பொன்னம்மாள் என்றே கையொப்பம் செய்துள்ளேன்.

கடந்த, 07.01.2017 ஆம் தேதி குன்னூர் துணை காவல் கண்காணிப்பாளர் அவர்களின் வாய்மொழி உத்தரவின் பெயரில் வெல்லிங்டன் காவல் நிலைய குற்ற எண் 13/2017 சட்ட பிரிவுகள் 392 இதச வழக்கில் வழக்கு கோப்பை தொடர்புலன் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் திரு. கிருஷ்ணன் அவர்கள் வசம் இருந்து பெற்று, இவ்வழக்கின் சம்பவ இடம் சென்றும், சம்பவ இடத்தை சாட்சிகள் வினோத் குமார் ஜெரால்ட் ஆகியோர் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தும், பார்வை மகஜரில் மேற்கண்ட சாட்சிகளிடம் சாட்சி கையொப்பம் பெற்றேன். அந்த மாதிரி வரைபடம் (அதசாஆ 12) ஆகும்.

பின்னர், இவ்வழக்கின் சாட்சிகள் வாதி ஜெயமணி மற்றும் ஆரோக்கியராஜ், சரோஜினி, திவ்யா, சதீஷ்குமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். மேலும், வெல்லிங்டன் காவல் வட்ட ஆய்வாளர் சிறப்பு பணி முடித்து அன்றைய தினமே வந்ததால் இவ்வழக்கு கோப்பை தொடர் புலன் விசாரணைக்காக அவர்கள் வசம் ஒப்படைத்தேன். மேலும், வெல்லிங்கடன் வட்ட ஆய்வாளர் 02.03.2017 ஆம் தேதி இவ்வழக்கு சம்பந்தமாக என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். என்னுடைய பெயர் மாற்றத்திற்கான ஆவணத்தை தாக்கல் செய்தேன். அது இரண்டுதாள்கள் உடையது (அதசாஆ 13) ஆகும். (எதிரிதரப்பில் அதசாஆ 13 குறியீடு செய்வதற்கு கற்றறிந்த வழக்கறிஞர் திரு.சந்திரபோஸ் அவர்களின் கடுமையான ஆட்சேபனையுடன் பதிவு செய்யப்பட்டுது.)

<u>1 ஆம் எதிரிதரப்பு குறுக்கு விசாரணை:–</u>

நான் எப்போது புலன் விசாரணையை தொடங்கினேன் என்று கேட்டால் 07.01.2017 ஆம் தேதி காலை 10.00 க்கு தொடங்கினேன். நான் புலன் விசாரணையை தொடங்கிய போது வெல்லிங்டன் காவல் நிலைய பொறுப்பில் இருந்தேனா என்று கேட்டால் இல்லை. அனைத்து மகளிர் காவல் நிலையம் குன்னூரில் காவல் ஆய்வாளராக இருந்த போது, கூடுதல் பொறுப்பாக வெல்லிங்டன்

காவல் நிலையத்தில் அலுவலில் இருந்தேன். இந்த வழக்கு கோப்பினை நான் எங்கு வைத்து பெற்று கொண்டேன் என்று கேட்டால் இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கை வெல்லிங்டன் காவல் நிலையத்தில் பதிவு செய்த உடனே குன்னூர் வட்ட காவல் துணை கண்காணிப்பாளர் வாய்மொழி உத்தரவில் உடனடியாக வெல்லிங்டன் காவல் நிலையம் சென்று கோப்புகளை பெற்று புலன் விசாரணை மேற்கொள்ள உத்தரவிட்டார். அதன்படி வெல்லிங்டன் காவல் நிலையம் சென்று கோப்புகளை பெற்று புலன் விசாரணை மேற்கொண்டேன்.

நான் குன்னூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் இருந்து நேரடியாக சம்பவ இடம் சென்றேனா என்றால் இல்லை. வெல்லிங்டன் காவல் நிலையம் சென்று கோப்புகளை பெற்றுவிட்டுதான் அங்கிருந்து சம்பவ இடம் சென்றேன். அன்றைய தினம் நான் எந்தெந்த சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றால் ஜெயமணி, ஆரோக்கியராஜ், சரோஜினி, திவ்யா, சதீஷ்குமார், வினோத்குமார், ஜெரால்ட் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். நான் விசாரித்து கோப்புகளை ஒப்படைத்த பின்னர் எனக்கு பின் வந்த புலன் விசாரணை அதிகாரி மேற்சொன்ன சாட்சிகளை மீண்டும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தாரா என்றால் அது குறித்து என்னால் சொல்லமுடியாது. எதிரிக்கு வழங்கப்பட்ட நகல்களில் சாட்சி விசாரணை வாக்குமூலம் பதிவுகள் இவற்றை குறித்து பார்க்கும் போது, நான் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்த ஆவணங்கள் காணப்படவில்லை என்றும், எனக்கு பின் தொடர் புலன் விசாரணை அதிகாரியின் வாக்குமூலம்தான் உள்ளது என்றால் சரிதான்.

அதசாஆ 12 மாதிரிவரைபடத்தில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அறையை குறித்த முழுவிவரங்கள் அடங்கிய வரைபடம் அதசாஆ 12 மற்றம் பார்வை மகஜரில் காணப்படவில்லை என்று சொன்னால் சரிதான். கதவு எண் மற்றும் வெளிப்புற அமைப்பு வரைபடமாக தாக்கல் செய்துள்ளேன். பார்வை மகஜரில் சம்பவ இடத்தில் இருந்து 25 அடி தூரத்தில் ஒரு கோவில் இருப்பதாக சொல்லப்பட்டாலும், இது குறித்த வரைபடம் அதசாஆ 12 ல் காணப்படவில்லை என்று சொன்னால் சரிதான்.

அதசாஆ 2 பார்வை மகஜசரில் தேதி திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அது சரியல்ல. 7 ஆம் தேதிதான் பார்வை மகஜர் தயாரிக்கப்பட்டுள்ளது. அதசாஆ 1 புகாரில் என் வீட்டின் பின்பக்க கதவு வழியாக வந்த அருகில் இருந்தவர்களிடம் எனது நாத்தனார் விஜயகுமாரியை வரச்சொல்லி நடந்த சம்பவத்தை கூறினேன் என்று சொல்லியிருப்பதால் அந்த அருகில் இருந்தவர்களை நான் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் நான் விசாரிக்கவில்லை. வழக்கு சம்பவ இடத்திற்கு நான் சென்று பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்து சாட்சிகளை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்ததாக சொல்வது நடைபெறவில்லை என்று சொன்னாலும், வழக்கிற்காக நான் புனைந்து சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதன் காரணமாகதான் எதிரிக்கு சார்பு செய்யப்பட்ட நகல்களில் நான் விசாரித்த சாட்சிகளின் வாக்குமூலங்கள் காணப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை:–</u>**

இல்லை.

Sd/- பொன்னம்மாள்/

Typed down to my dictation, in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/ Thiru. M.Senthilkumar/
Sessions Judge,
Magalir Neethimandram,
(FTMC), Udhagamandalam.